முருகப்பெருமான் துணை

**மகான் ஜெகநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.09.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அருளாக அறமாக வந்தநல்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
பெருமை தரும் உன் வழிகாட்டல்
பேருலகை காக்கும் எனக் கூறி
2. கூறியே பிலவ யாளி திங்கள்
குறைவிலா இருபானேழ் திகதி கதிர் வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 27ம் நாள், 12.09.2021, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க ஜெகநாதரும் அருள்வேன்
3. அருளவே உலகம் பாதுகாப்பும்
அமைதியும் வளமும் காண
அருளிடும் அரங்க ஞானியரின்
ஆன்மீக ஞானவழி எங்கும் பரவ வேண்டும்
4. வேண்டி பிரணவக் குடிலை
விடாது வந்து உலகமக்கள்
தொண்டாற்றி தரும வழியில்
தொடர்ந்து வர ஞானிகளின் ஆசி
5. ஆசிபலம் கூடி இனிதே
அகிலம் அமைதி வளம் காணும்
ஆசிவழி தீட்சை வழி வர
அனைவருக்கும் ஞானவாழ்வாக மாறி
6. மாறியே மக்களிடை தயவும்
மனுதர்மம் காக்கும் குணமும்
ஆறுதலாக மற்றவர்க்கு நடக்கும்
அன்பான செயல்வடிவும் பெருகி
7. பெருகியே பேருலகம் தன்னில்
பிரச்சினை பிரிவினை என்பதில்லா
பெருமளவில் ஒற்றுமை நிலையும்
பெருகியே உலகம் சிறக்கும்
8. சிறக்கவே எல்லா சித்தியும்
சேவை வழி வருபவர்க்கு தந்து
அறத்தின் பலம் கூட்டும் ஞானி
அறத்தின்பால் இணைக்கும் ஞானி

9. ஞானி அரங்கன் வழி வர
ஞானயுகமாற்றம் சடுதி காணும்
ஞானி அரங்கன் சீடரென
நம்பிக்கைபட வாழ்வை மாற்ற

10. மாற்றவே எல்லா மக்களுக்கும்
மரணம் வெல்லும் பலமும்
ஆற்றல்பட மறுமை போக்கும் வரமும்
அரங்கமகான் வழி கிட்டி

11. கிட்டியே உலகோர் தேறுவர்
குறைவிலா மாற்றம் கண்டிட
தட்டாது ஞான ஆட்சி உருவாகும்
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—